# அதிகாரம் - 5

## இல்வாழ்க்கை

அஃதாவது, மனையாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு

**"பாழே மடக்கொடி இல்லாமனை"** ஆதலின், இல் என்பது மனையாளோடு கூடி வாழும் நிலையைக் குறித்தது. வாழ்க்கை என்றது வாழ்க்கைச் சிறப்பை. இல்லினது வாழ்க்கை என விரிக்க, ஆறாம் வேற்றமைத் தொகை நிலைத் தொடர்.

வாழ்வார்க்கு இன்றியமையா அறம் நிறைந்த பனுவலைத் துறந்தார் இயற்றியருளியதாலும், மழையினாலும் மெய்யுணர்வு பெறுவதோர் வேட்கையாலும் நிலைபெற்ற தான இவ்வுலகின் தோற்றத்தைக் கூறியருளிய ஆசிரியர், சமயக் கணக்கர் மதி வழி கூறாது அறிவுடையார் இன்னது செய்வார், இன்னது விலக்குவார் என எடுத்துக் காட்டுதல் வாயிலாக இது பொருள் எனக்கூறுவாராகி முதற்கண் இல்வாழ்க்கையைக் கூறியருளினார்.

### 41

**இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு**
**நல்லாற்றி னின்ற துணை.**

**பி.மா.:** **இல்வாழ்வான் என்பான் இயல்பு உடைய மூவர்க்கும் நன்மை ஆற்றின் நின்ற துணை.**

பொருள்: இல்வாழ்வான் என்பான் - மனையாளோடு கூடி வாழுகின்றவன் என்று சொல்லப் பெறுகின்றவன், இயல்பு உடைய - இயற்கைத் தொடர்புடைய, மூவர்க்கும் - அன்னை, தந்தை, ஆசிரியன் ஆகிய முத்திறத்தார்க்கும், நன்மை ஆற்றின் நின்ற துணை - அந்த முத்திறத்தார்க்கும் ஆன நல்லொழுக்க நெறிக்கு ஏற்ப நின்ற **துணை**யாவான்.

**கருத்து:** இல்வாழ்வான் தாய், தந்தை, ஆசிரியர்க்கு நற்றுணையாதல் வேண்டும்.

தாய் தந்தை ஆசிரியன் மூவரும் இல்வாழ்வானுக்கு இயற்கை முறையில் அமைந்த தொடர்புடையாராதல் வெளிப்படை; பிறப்புத் தருதல், வளர்ப்புத் தருதல், அறிவு தருதல் ஆகிய மூன்றும் அம்மூவர்க்கும் உரியவையாதலின்.

மூவர் என்பவர், வடவர் கூறும் பிரமசாரி, வானப் பிரத்தன், சந்நியாசி என்றார் பரிமேலழகர். வருண முறையை எதிர்க்கும் திருவள்ளுவர் பிரமசாரி முதலிய மூவரை உட்கொண்டு செய்யுள் செய்வாரா? - பரிமேலழகர் தம் மதம் நோக்கித் தமிழரை வலிந்து இழுக்க முயல்வது வெளிப்படை. இவ்வாறு பொய்ப் பொருள் கூறிய அவர் மேற் செய்யுட்களிலும் இடர்ப்பட்டு, ஒரு பொய்யை மறைக்க மற்றொரு பொய் புகன்று செல்வது ஆங்கு ஆங்கும் காட்டப் பெறும்.

இல்வாழ்வான் அன்னைக்குத் துணையாவது என்பது, பிணி, மூப்பு, சாக்காடு நேராமல் உண்டி உடை உறையுள் உதவுவதோடு, தானும் நன்னெறி பற்றியே ஒழுகுதல்.

தந்தைக்குத் துணையாவது என்பது, உண்டி முதலிய உதவுவதோடு, 'இவன் தந்தை என்னோற்றான் கொல்" எனும் சொல்லையும் ஏற்படுத்தல்.

ஆசிரியர்க்குத் துணையாவது என்பது "தயையாக வித்தையைச் சாற்றினோன் ஒரு பிதா" (குமரேச சதகம்) ஆதலின், அவனையும் தந்தை என எண்ணி, அவற்கு, உண்டி முதலிய வற்றில் குறைபாடு இன்றித் துணை செய்வதும், அவன் பால் என்றும் நன்றியுடையனாதலுமாம். என்பான் - எனப்படுவான், செயப்பாட்டு வினை செய்வினையாய் வந்தது.

**- குயில், கிழமை இதழ், 22.11.1960**

## 42

**துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு**
**மில்வாழ்வா னென்பான் றுணை.**

**பி.மா.: இல்வாழ்வான் என்பான் துறந்தார்க்கும்**
**துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் துணை.**

பொருள்: இல்வாழ்வான் என்பான் - இல்வாழ்வான் என்று சொல்லப் பெறுவோன், துறந்தார்க்கும் - இல்லம் துறந்தார்க்கும், துவ்வா தவர்க்கும் - வறியவர்க்கும், இறந்தார்க்கும் - செத்தவர்க்கும், துணை - துணையாம்.

கருத்து: துறவிகட்கும், வறியவர்கட்கும், இறந்தார்க்கும் இல்வாழ்வான் துணை.

இங்குத் துறந்தார்க்கும் என்றது களைகண் ஆனவரால் துறக்கப் பட்டாரை என்றுகூறி இடர்ப்பட்டார் பரிமேலழகர், துறந்தாரைச் சந்நியாசி என்று முற்பாட்டில் கூறிப் பொய்த்ததால். துவ்வாதவர் - சாப்பாடின்றி வருந்துபவர் ஆதலின் வறியவர் என்றாம்.

இறந்தார்க்கு இல்வாழ்வான் துணை செய்தலாவது: நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்துவதென்று பரிமேலழகர் உரை கூறினார். புலனழுக்கற்ற அந்தணாளரான கபிலரும் நகை செய்த கொள்கை இது.

**புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை யாவது.**

*- மணி; சிறை, செய். 22, 137*

இனி, இறந்தார்க்கு இல்வாழ்வான் செய்யும் துணையாவன:

வையம் உய்ய அவர் வகுத்த முறைகளை அவர் இறந்தபின், பயனுற வெளியிடுவதும் முடிக்காமல் விட்ட மருந்தை அவர் இறந்தபின் இவ்வுலகிற் பரப்புதலும், இயற்றிய நன்னூற்களை அவர் இறந்த பின் முடித்துப் பயன்படுத்தலும், பிறர் நலம் கருதித் தொடங்கிய பெருஞ்செயல், அரும் பொருள்களை அவர் இறந்தபின் நிறைவு செய்து உலகுக்குப் பயன் படுத்தலும்.

இறந்தார்க்குச் சேரவேண்டிய புகழை அவர்க்குச் சேர்ப்பதே இருப்பார் கடவுள் என்க.

இறந்தாரின் உடலை இடுகாடு சேர்ப்பதும் இருப்பார் செய்யும் துணை எனின் அதுவும் அமைவதே.

*- குயில், கிழமை இதழ்,* **22.11.1960**

## 43

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றாங்**
**கைம்புலத்தா றோம்ப றலை.**

**பி.மா.:** **தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்**
**என்ற ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை.**

**பொருள்:** தென்புலத்தார் - கடல் கோட்பட்ட குமரி நாட்டி னின்று புகலென வந்தோரும், தெய்வம் - தெய்வங்களும், விருந்து - விருந்தினரும், ஒக்கல் - சுற்றத்தாரும், தான் - தானும், என்ற - என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து - ஐந்து இடத்தும், ஆறு - செய்யும் அறநெறியை, ஓம்பல் - வழுவாது காத்தல், தலை - தலையாய அறமாம்.

**கருத்து:** தென்புலத்தார் முதலிய ஐந்திடத்தார்க்கும் இல்வாழ்வான் துணையாதல் வேண்டும்.

**தென்புலத்தார் பற்றிய விளக்கம்:** தொல்காப்பியப் பாயிரத்திற்கு நச்சினார்க்கினியர் உரை நவிலுங்கால் குமரி என்ற சொல்லுக்குக் குமரியாறு என்று பொருள் கூறினார். அவர் அவ்வாறு பொருள் கொண்டதற்குக் காரணம். நச்சினார்க்கினி யருக்கு முன்னிருந்த இளம்பூரணரும், இறையனாரகப் பொருள் உரை ஆசிரியர் முதலியோரும், புறநானூற்றுப் புலவர் சிலரும் குமரியை ஓர் ஆறென்று கூறியிருந்ததேயாகும்.

தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்துக் குமரி என்பது ஓர் ஆறாக இருந்திருக்க வேண்டும் என்றே ஆராய்ந்துணரப் பட்டதாகும்.

அடியார்க்கு நல்லார் குமரிக்குத் தெற்கே ஒரு காலத்திருந் தொழிந்த நாற்பத்தொன்பது நாடுகளின் பெயர்களையும் பின்வருமாறு கூறினார்.

அக்காலத்துப் பஃறுளி என்னும் ஆற்றுக்கும், குமரி என்னும் ஆற்றுக்கும் இடையே எழுநூற்றுக்காவத ஆறும் அவற்றின் நீர் மலிவானென மலிந்த, ஏழ்தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ்முன் பாலை நாடும், ஏழ்பின் பாலை நாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ் குணகாரை நாடும், ஏழ் குறும்பனை நாடும், என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால் குமரியாகிய பௌவம் என்றார் என்று உணர்க.

முன்னொரு காலத்தில் குமரி முனைக்குத் தெற்கில் குமரியாறு ஒன்று இருந்ததென்றும், அதற்குத் தெற்கே பல காவதத்துக்கப்பால் பஃறுளியாறு இருந்ததென்றும், இவ் விரண்டுக்கும் இடையே உள்ள நிலப்பகுதி கடலாற் பன்முறை யாகக் கொள்ளப்பட்டதென்றும் அறியக் கிடக்கின்றதன்றோ!

அவ்வாறு பலகால் கடல்நீர் ஏறி விழுங்கப்படுந்தோறும், அந் நாடுகளில் இருந்தாராகிய தென்புலத்தார் (தென்புறத்தார்) இங்குப் புகல் என்று புகுவாரன்றோ? அவரையே இங்கு ஆசிரியர் தென்புலத்தார் என்றார் என்க.

தென்புலம் - தெற்கிடம்; ஏழ்தெங்கநாடு முதலிய நாற்பத் தொன்பது நாடுகள்.

தென்புலத்தார் என்பது பிதிரர் என்று பொருள் கூறினார் பரிமேலழகர். அவ்வாறு அவர் பொருள் கூறியதற்கு, இடைக் காலத்தில் வடவரால் புகுத்தப்பட்ட பொய்நூற்களே காரணம் என்க.

தென்புலம், தெற்கும் புலமும் ஆகிய இரு சொற்களால் ஆகியது. புலம் - இடம். புலம் என்பது அறிவுக்கும் பெயர் எனின், இங்குப் பொருந்தாமை அறிக.

**“கலை மலிந்த தென்புலவர் கற்றோர் தம் இடர் தீர்க்கும், - கருப்பறியலூர்”**. (சுந். தேவாரம் திருப்பறி) என்ற இடத்தும் தென் புலத்தாரையே குறித்த தென்பர்.

தெய்வம் என்பதன் விளக்கம்.

மிகுபழ நாளில், தன்னில் எழுந்து இன்னல் விளைக்கும் காட்டுத் தணலையும், எந்நிலத்தும் பாய்ந்து இடர்ப்படுத்தும் காட்டாற்றுப் புனலையும், மாற்றருந் துன்பம் விளைவிக்கும் பெருங்காற்றையும், கலங்கக் கலங்க வந்தடிக்கும் விலங்குகளையும் எண்ணிப் பொதுவாக அத்துன்பத்தைத் “தெய்” என்ற சொல்லாற் குறித்தார்கள்.

“தெய்” என்ற அச்சொல்லிற்குக் கொல்லுவது என்பது பொருள்.

**தெய் என் கிளவி கோறலும் தெய்வமும் (பிங்கலந்தை 642)**

என்பது இங்கு நோக்கற்குரியது.

பின்னர் அம்மக்கள் அறிவு வளர்ச்சி பெற்ற அளவில், அத்தணலை உணவு ஆக்குதற்கும், உலைக்களம் எடுத்தற்கும், அப் புனலை, நெல் முதலிய விளைத்தற்கும், குள முதலிய காண்டற்கும், அக்காற்றை வெப்பம் ஆற்றுதற்கும், நெல்லைத் தூற்றுதற்கும், அவ்விலங்குகளை ஏரடித்தற்கும், பால் கறத்தற்கும் பயன்படுத்துவராகி அவற்றைப் போற்றலானார்கள். திங்களைப் போற்றினர்; செங்கதிர் போற்றினர்; மழைதரும் வானைப் போற்றினர்; வளஞ் செய்யும் நிலத்தைப் போற்றினர்.

அப்போதும் அவர்கள் அவைகளைத் தெய் என்றே கூறினர். மொழி வளர்ச்சி ஏற்பட்ட போதன்றோ தெய் என்பது தெய்வம் ஆயிற்று. தெய்வம் தூய தமிழ்ச் சொல். (தெய்-வ்-அம்) தெய் முதனிலை; அம் பெயரிறுதிநிலை; வ் பெயரிடைநிலை எனப் பிரித்துணர்க. இதை வடசொல் என்று கூறி மகிழ்ந்து கொள்வார் சில கலகக்காரர்.

**"யரழ என்னும் புள்ளி முன்னர் முதலா கெழுத்து - வகர மொடு தோன்றும்"** (தொ.எ.29) என்ற எழுத்து மயங்கு முறைக்குத் தெய்வம் வரலாறு காட்டப்பட்டதையும் அவர் அறியார்.

இதனாலே, நாளடைவில் கண்ணையும் மனத்தையும் கவரும் பொருள்களையும், பயன்படு பொருள்களையும் தெய்வம் என்றார் என அறிந்து கொள்ள வேண்டும்.

**காலம் உலகம் உயிரே உடம்பே,**
**பால்வரை தெய்வம் வினையே பூதம்,**
**ஞாயிறு திங்கள் சொல்லென வருஉம்,**
**ஆயீரைந்தும் பிறவும் அன்ன,**
**ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்,**
**பால்பிரிந் திசையா உயர்திணை மேன.**

*- தொ.சொ.58*

என்ற நூற்பாவினால், காலம் தெய்வமாயிற்று. சொல் தெய்வம் ஆயிற்று. செயல் தெய்வம் ஆயிற்று. ஞாயிறு, திங்கள், கோள்கள் தெய்வங்கள் ஆயின. பின்னும் செல்வம் தெய்வமாயிற்று. நெல் முதலியவை தெய்வங்கள் ஆயின. வெற்றி, புகழ், நூல் தெய்வங்களாயின. சான்றோர் தெய்வம், அன்னை தெய்வம், தந்தை தெய்வம், ஆசிரியன் தெய்வம், தலைவிக்குத் தலைவன் தெய்வம், காதல் தெய்வம், அரசன் தெய்வம் ஆயினவாறு காண்க.

**குரவை தழீஇயாம் மரபுளிப் பாடித்**
**தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்.**

*- முல்லைக்கலி 3 அடி 75 -76*

இதில் புகழ் தெய்வமாயிற்று.

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்.**

*- குறள் 28*

இதில் சான்றோர் தெய்வங்களாகக் கூறப்பட்டனர் என்றிவ் வாறு (தொல் - பொருள் 81-ம் பாட்டின் உரையில்) கூறப்பட்டது.

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

*- குறள் 15*

இதில் மழை தெய்வமாகக் கூறப்பட்டது. (இவ்வாறு தொல் - பொருள் 81-ல் கூறப்பட்டது.)

**காரார் புறவிற் கலித்த புதர்மாந்தி**
**ஆ வாழியரோ நெடிது.**

இதில் ஆ தெய்வமாகக் கூறப்பட்டது. (ஷை உரை)

**கொடி நிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.**

*- தொல். 88*

இதில் கதிரும் தீயும் திங்களும் தெய்வங்கள் ஆயின.

**குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற**
**புதல்வர்க்குத் தந்தையும் தாயும் - அறவோர்க்(கு)**
**அடிகளே தெய்வம் அனைவர்க்கும் தெய்வம்**
**இலைமுகப் பைம்பூ ணிறை.**

*- நீதிநெறி விளக்கம் 27*

இதில் கொழுநன் முதலியவர் தெய்வங்கள் ஆயினவாறு காண்க.

மற்றும், அன்பு, அறிவு, வாய்மை, அறம் முதலிய நற்பண்புகள் அனைத்தும் தெய்வங்கள் எனவும் அறிதல் வேண்டும்.

இனித் தென் புலத்தாரை ஓம்புவதாவது: தமிழ் நாட்டார் என்று கருதி அவர் வாழ்வுக்கு ஆன வழிவகை செய்தலாம். தெய்வங்களை ஓம்புவதாவது: ஆப் போன்றவைகளை நன்கு காத்தலும், அரசன் போன்றோரை வாழ்த்தி அவர் கட்டளைக்குக் கட்டுப்படுவதும் அவரைப் போற்றுவதும் ஆம்.

நிலம், தீ, நீர், வளி, விசும்பு போன்றவைகளின் பயனறிதலும் போற்றுதலும் ஆம்.

அறம் முதலியவற்றின் அருமை தெரிந்து மேற் கொண் டொழுகலும் ஆம்.

புகழைப் பெரும்பயனாகக் கருவி உலகில் அருஞ்செயல் செய்தலும் ஆம்.

இனி விருந்தோம்பலாவது - உள்ளம் உவந்து வரவேற்று உண்பித்தல்.

ஒக்கல் ஓம்பலாவது: உறவினர்க்கு ஒன்று உற்றுழிக் கை கொடுத்தலாம்.

தன்னை ஓம்புதலாவது: தன் மனைவி மக்களையும் தென் புலத்தாரையும் காத்தற்கு ஆன தகுதிக்கு இடையூறின்றித் தன்னைக் காத்துக் கொள்வதாம்.

தலை - முதன்மை, அஃது அறம் என்றாம்.

**- குயில், *கிழமை இதழ்*, 29.11.1960**

## 44

**பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.**

**பி.மா: வாழ்க்கை பழி அஞ்சி பாத்து ஊண் உடைத்து**
**ஆயின் எஞ்ஞான்றும் வழி எஞ்சல் இல்.**

**பொருள்:** வாழ்க்கை - ஒருவனின் இல்வாழ்க்கையானது, பழிஅஞ்சி - பழிக்கு அஞ்சி, பாத்தூண் உடைத்து ஆயின் - பகுத் துண்டலைக் கொண்டதாயிருப்பின், எஞ்ஞான்றும் - எக் காலத்தும், வழி எஞ்சல் இல் - அவன் வழி வருவோர் உயர்ந்து நிற்றலன்றிக் கெடுதல் இல்லை.

**கருத்து:** நல்வழியில் செல்வம் சேர்க்கவேண்டும். அதையும் தனக்குள்ளது கழித்து மற்றதைப் பொது நலத்துக்குப் பகிர்ந்து உதவ வேண்டும்.

பகுத்துண்டலைப் பின்னர்க் குறித்தலின், முதற்கண்ணுள்ள பழியஞ்சுதல் செல்வம் சேர்த்தற்கண் பழியஞ்சுதல் எனக்கொண்டு அறவழியில் பொருள் தேடுக என்றாராயிற்று.

பாத்தூண் என்றது, தன் குடும்பத்துக்கானதைவிட மிஞ்சிய செல்வத்தை அரசுக்கும், அற நிலையங்கட்கும் ஆம் வகையில் பிரித்துக்

கொடுத்தலை. பகுத்து - பாத்து என மருவிற்று. உண்ணலின் முதனிலை ஆகிய உண், ஊண் எனத் திரிந்தது. இது முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

பழியஞ்சி என்பது இரட்டுற மொழிந்தது: பழியஞ்சிப் பொருள் சேர்த்தலுக்கும், பழியஞ்சிப் பாத்தூண் உடைமைக்கும் ஆயினமையான்.

பகுத்துண்ணுதலில் பழியஞ்சுவதாவது, தான் பெற்ற செல்வம் தன் நாட்டுக்கே ஆம்படி பகுத்தல்; பிற நாட்டார்க்கு ஆம்படி பகுத்தானாயின் அவனுக்குப் பழிநேரும் என்க.

ஒருவன் மீத்துவைக்கும் செல்வத்தாலேயே அவன் வழி வருவோர் வாழ முடியும் என்று கருத வேண்டா, அவன் பழியஞ்சிப் பகுத்துண்ணக் கடவன். அதனால் அவன் அடைந்த அறமும் அறத்தால் வந்த புகழும் வழி வந்தோரை வாழவைக்கும் என்பார், இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

## 45

**அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

**பி.மா.:** **இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்து**
**ஆயின் அது பண்பும் பயனும்.**

பொருள்: இல்வாழ்க்கை - காதலிருவர் கருத்தொருமித்து வாழ்வதோர் இல்வாழ்க்கையானது, அன்பும் - அன்பையும், அறனும் - அறத்தையும், உடைத்தாயின் - கொண்டதாயிருந்தால், அது - அவ்வாறு கொண்ட அது, பண்பும் பயனும் - அவ்வில் வாழ்க்கையின் பண்பும், பயனுமாகும்.

கருத்து: மன நலத்தானாகிய அன்பும், அறமும் கொண்ட இல் வாழ்க்கையே பேரின்ப வாழ்க்கை.

அன்புக்கும் அறத்திற்கும் அப்பாலாக இன்பம் பயப்பதொன் றில்லை என்பார் பண்பும் பயனும் அது என்றார். இச் செய்யுளால் உருவ வணக்கம், சமயக் கணக்கர் கூறும் தம்மில் மாறுபட்ட பலவகை முயற்சிகள், மூட வழக்கங்கள் அனைத்தையும் மறுத்தார்.

இதில் பயன் என்றது இன்பத்தை; பண்பு என்றது அன்பையும், அறத்தையும்; அன்பும் அறமும் கொண்டிருத்தலே இன்ப நிலை என்று வலியுறுத்தியதை உற்று நோக்கித் தெளிக.

## 46

**அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றில் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவ தெவன்.**

**பி.மா: இல்வாழ்க்கை அறத்து ஆற்றின் ஆற்றில் புறத்து**
**ஆற்றில் போஒய்ப் பெறுவது எவன்?**

பொருள்: இல்வாழ்க்கை - மனையாளோடு கூடிச் செய்யும் இல் வாழ்க்கையை, அறத்து ஆற்றின் ஆற்றில் - அறவழியில் நடத்தினால், புறத்து ஆற்றில் போஒய்ப் பெறுவது எவன்? பிற வழியிற் சென்று பெறத் தக்க பயன் எது? (ஒன்றுமில்லை என்றபடி)

கருத்து: அற வழியில் ஆற்றும் இல்வாழ்க்கை இன்பந்தரும். பிற வழியில் ஆற்றுவது துன்பந்தரும்.

புறத்தாறு என்பது, துறவற நெறி என்று கருதினார் பரிமேலழகர். துறவறத்தாலும் பயனை அடையலாம் என மேல் ஆசிரியர் குறித்தார் ஆதலின் அது பொருந்தாது. அறநெறிக்கண் இல்லறம் செய்வதால் இன்பம் கிடைக்கும் என்றார் முன்னும். பிற நெறி என்றது, ஈண்டு வந்தேறிகள் மக்கள் பால் விதைத்துள்ள மடமை நெறிகளை.

கொலை வேள்வி செய்வதால் வானுலகு பெறலாம். உருவங்களை நோக்கி நோற்றலால் எல்லாம் பெறலாம் என்பன போன்றவற்றில் உள்ள தீ நெறிகளால் துன்பமே உண்டாம் என்பார் இவ்வாறு கூறினார் என்க.

அறத்தாறு, புறத்தாறு என்பவற்றில் ஆறு - வழி. ஆற்றின் என்பது, ஆற்றுதலின் முதனிலையாகிய ஆற்று, இன் என்ற எதிர் கால வினையெச்ச இறுதிநிலை பெற்றது. எவன் - எது, எவை எனும் இரண்டுக்கும் பொதுவாய் வரும் வினா.

## 47

**இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்**
**முயல்வாரு ளெல்லாந் தலை.**

**பி. : இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாந் தலை.**

பொருள்: இல்வாழ்க்கை - இல்லாளோடு கூடிவாழும் வாழ்க்கை யினின்று, இயல்பினால் - அதற்குரிய அற முயற்சியோடு,

வாழ்பவன் என்பான் - வாழ்கின்றவன் என்று சொல்லப் பெறுவான், முயல்வாருள் எல்லாம் தலை - பிற வழியில் முயல்வார் எல்லாரினும் மேலானவன்.

கருத்து: அற முயற்சியுடன் கூடிய இல்லறத்தான், பிற முயற்சி செய்வானினும் மேலானவன்.

பிறமுயற்சி: கொலை, வேள்வி, உருவ வணக்கம் முதலியவை.

## 48

**ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை**
**நோற்பாரி னோன்மை யுடைத்து.**

**பி. : ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.**

பொருள்: ஆற்றின் ஒழுக்கி– தவஞ் செய்வாரைத் தவநெறியே ஒழுகச் செய்து, அறன் இழுக்கா இல்வாழ்க்கை – அறம் பிழைக்காத இல் வாழ்க்கையானது, நோற்பாரின் நோன்மை உடைத்து – அத்தவம் செய்வாரின் ஆற்றலை விடப் பேராற்றல் உடையதாகும்.

கருத்து: தவம் செய்வார் ஆற்றலினும் இல்வாழ்க்கை நடத்துவான் ஆற்றல் பெரிது.

தவம் செய்வார்க்குறும் இடையூறு நீக்குவான் இல்வாழ் வான் ஆதலின், இல்வாழ்வான் ஆற்றல் பெரிது என்றார். ஒழுக்கி - ஒழுகி என்பதன் பிறவினை.

**- *குயில், கிழமை இதழ், 13.12.1960***

## 49

**அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்**
**பிறன்பழிப்ப தில்லாயி னன்று.**

**பி.மா : இல்வாழ்க்கையே அறன் எனப்பட்டது. அஃதும்**
**பிறன் பழிப்பது இல் ஆயின் நன்று.**

பொருள்: இல்வாழ்க்கையே அறன் எனப்பட்டது - மனையாளோடு கூடி நடத்தும் வாழ்க்கையே அறம் எனப்பட்டது, அஃதும் – அறமே நிறைந்த அவ்வில்வாழ்க்கையும், பிறன் பழிப்பது இல் ஆயின் - பிறனால் பழிக்கப்படுவது இல்லா தொழிந்தால், நன்று - அறம் எனப்படும்.

கருத்து: இல்வாழ்வே, அறவாழ்வு என்று சொல்லப் படினும், ஒரு மாசு உறினும் அது அற வாழ்வு எனப்படாது.

துறவறத்தின் வேருக்கு இல்லறமே காரணம் ஆதலின், அறன் என்றார். அதுவேயுமன்றி இல்லாளோடு கூடி நடத்தும் வாழ்க்கை வகையில் அறமே நிறைந்திருத்தலின் இல் வாழ்க்கையே அறம் என்றார் என்பதும் அறிதல் வேண்டும்.

இனி, அறம் நிறைந்த அவ்வில்வாழ்க்கையும், பிறன் பழிக்கும் வகையில் சிறிது குற்றப்படினும் அஃது அறன் எனப் படாது என்பார் இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

அறன் எனப்பட்டதே என்பதன் பிரிநிலை ஏகாரம் இல்வாழ்க்கை என்பதனோடு கூறப்பட்டது. நன்று – அறம்.

துறவறத்தைச் சிறப்பிலதாகக் காண்பார் ஆசிரியர், ஏன்? இல்லத் துறவை நீக்கி உள்ளத் துறவினை ஆராயின், அவ் வுள்ளத்துறவால் உலகுக்குப் பயன் எதுவுமில்லா தொழிலால் என்க. மேலும், துறந்தான் என்பான், இல்வாழ்வானையே எதிர்பார்த்தவனாகிறான் அதனாலும் என்க.

## 50

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

**பி.மா.: வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

பொருள்: வையத்துள் – உலகத்தில், வாழ்வாங்கு வாழ்பவன் – வாழும் முறைப்படி வாழும் ஒருவன், வான் உறையும் – வானுலகில் வாழ்வதாகச் சொல்லப்படும், தெய்வத்துள் வைக்கப்படும் – தெய்வங்களின் வரிசையில் வைத்து எண்ணப் படுவான்.

கருத்து: மனையாளோடு கூடி, வாழும் முறைப்படி வாழ்க.

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்றது பிறர் தம் மதம் மேற்கொண்டது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் என்றது, அவ்வாறு மேற்கொண்ட அப் பிறர் மதத்தைக் களைந்தது. தெய்வத்துள் வைக்கப்படுவதற்குச் சமயக் கணக்கர் மேற்கொள்ளப் பணித்த முறைகள் வேறு வேறு. அவற்றையெல்லாம் தேவையற்றவை என ஒதுக்கி, வாழும் முறைப்படி வாழ்க என்றார்.

எத்தனை சமையங்கள்! அவையும் ஒன்றினோடொன்று ஒவ்வாதவை. அச்சமயங்கள், மக்களை மேற்கொள்ளப் பணிக்கும் முறைகள் எத்தனை! அவைகளும் ஒன்றினோடொன்று ஒவ்வாதவை.

அம்முறைகளை மேற்கொண்டு மக்கள் படும் இன்னல்கள் எத்தனை! மான இழப்பு, மதியிழப்பு, செல்வ இழப்பு, செயலிழப்பு!

இத்தனை பாட்டுக்கும், பயனுண்டு எனும் உறுதியேனு முண்டா? அதுவும் இல்லை.

எனினும் மக்கள் தெய்வ உலகத்தில் தெய்வ வரிசையில் சேர இத்தனையும் பட்டுத்தான் ஆக வேண்டும் என்று நம்புகின்றார்கள் - நம்பச் செய்ததால்.

ஆசிரியர், மக்கள் மனத்தில் இடம் பெற்றுவிட்ட இந்த நம்பிக்கையை எதிர்க்க எண்ணவில்லை. தெய்வ வரிசையில் தெய்வமாகச் சேர வேண்டியதற்கே வழி சொல்வார் போல், மக்கள் மேற்கொள்ள வேண்டிய முறையை இதோ என்று காட்டினார். மக்களே! மனையாளோடு கூடி வாழும் முறை தவறாது வாழ்க்கை நடத்துங்கள் என்று கூறி அருளினார். இவ்வாறு ஆசிரியர் கூறியருளியதால், அவர் நல்லதோர் உண்மையை மக்களுக்குக் காட்டினாராயினர். இவ்வாறு ஆசிரியர் கூறியருளியதால், சமயக் கணக்கர் மதி வழியேகுதல் வேண்டாம் என்றும் விழிப்பூட்டியவராயினார்.

இவ்வதிகாரத்தால், இல்வாழ்க்கையின் மேன்மை, அதன் பயன் இவ்வாறெனு விளக்கியதோடு, சமையங்களையும் மறுத்து, வாழு முறைப்படி வாழ வேண்டியதோர் உண்மையையும் கூறியருளினார்.

- *குயில், கிழமை இதழ்*, **20.12.1960**

## அதிகாரம் - 6

### வாழ்க்கைத் துணை நலம்

அஃதாவது: முற்கூறிய இல்வாழ்க்கைத் துணையாகிய இல்லாளின் நன்மை.

### 51

**மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

**பி.மா.:** **வாழ்க்கைத் துணை மனை தக்க மாண்பு உடையாள் ஆகி, தன் கொண்டான் வளம் தக்காள்.**

பொருள்: வாழ்க்கைத் துணை - இல்வாழ்க்கைத் துணைவியாவாள், மனைதக்க - மனையின்கண்ணதான அறத்திற்கு ஏற்ற, மாண்பு உடையள் ஆகி - நற்பண்புடையவளாகி, தன் கொண்டான் - தன்னைக் கொண்டவனது, வளம் தக்காள் - வருவாய்க்குத் தக்க செலவு செய்யும் செட்டு உடையவள்.

கருத்து: வாழ்க்கைத் துணைவி, மனையறத்துக்கு ஏற்ற பண்புடையவள்; வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்யும் செட்டுடையவள்:

மனைக்குத் தக்க என்பது மனைத்தக்க என வந்தது; நான்கன் தொகை. வளத்துக்குத் தக்காள் என்பது வளத்தக்காள் என வேறுபாடுற்றது.

தன்கொண்டான், தன்னைக் கொண்டான் என விரிக்க. இரண்டன் தொகை. வேறுபாடு என்பதை விகாரம் என்பர் வடவர்.

### 52

**மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை**
**யெனைமாட்சித் தாயினு மில்.**

**பி.மா.:** **இல்லாள்கண் மனைமாட்சி இல்ஆயின் வாழ்க்கை எனைமாட்சித்து ஆயினும் இல்.**

பொருள்: இல்லாள் கண் - இல்லாளிடத்து, மனைமாட்சி - மனையறத்துக்கு வேண்டிய நற்பண்பு, இல் ஆயின் - இல்லையாயின், வாழ்க்கை - அவ்வில் வாழ்க்கையானது, எனை மாட்சித்து ஆயினும் இல் - செல்வ முதலியவற்றால் ஏத்தகைய பெருமையுடையதாயினும் அனைத்தும் இல்லையாகும்.

கருத்து: செல்வ முதலிய உற்ற குடும்பமாயினும், இல்லாளிடம் வேண்டிய நற்பண்பு அற்றதாயின் அனைத்தும் அற்றதாகிவிடும்.

மாட்சி - இதில் மாண் முதனிலை சி பண்புப் பெயர் இறுதிநிலை. இத்தூய தமிழ்ச் சொல்லை இன்றும், ஆரியச் சார்பினர் க்ஷி என்ற எழுத்து இட்டு எழுதி வட சொல்லாக்கி வருகின்றனர். காட்சியையும் அப்படி. அதில் காண் முதனிலை, சி தொழிற் பெயர் இறுதி நிலை.

## 53

**இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ**
**னில்லவண் மாணாக் கடை.**

**பி.மா.:** **இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என்**
**இல்லவள் மாணாக்கடை உள்ளது என்.**

பொருள்: இல்லவள் மாண்பு ஆனால் - இல்லாள் மாண்பு உள்ளவள் ஆனால், இல்லது என் - அக்குடும்பத்தில் இல்லாதது என்ன, இல்லவள் மாணாக்கடை - இல்லாள் மாண்பு இல்லாதவளானால், உள்ளது என் - அக்குடும்பத்தில் இருப்பது என்பது எது? (ஒன்றுமில்லை என்றபடி).

கருத்து: இல்லாள் மாண்பு உடையள் ஆதல் வேண்டும். மாண்புடையாள் ஆனால் எனற்பாலது, மாண்பு ஆனால் எனப்பட்டது. பண்பு பண்பிற்கானது ஆகுபெயர். இல்லாளிடம் பண்பில்லா விடில் என்ன இருந்தும் பயனில்லை என்றாராயிற்று.

**- *குயில், கிழமை இதழ்,* 20.12.1960**

## 54

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மையுண் டாகப் பெறின்.**

**பி.மா.:** **கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்**
**பெண்ணின் பெருந்தக்க யா உள.**

பொருள்: கற்பு என்னும் திண்மை - கற்பு என்பதோர் அசையாத் தன்மை, உண்டாகப் பெறின் - அடையப் பெற்றால், பெண்ணின் பெருந்தக்க யாஉள - பெண்ணை விட பெருத்த பெரும் பேறு வேறென்ன இருக்க முடியும்? (இல்லை என்றபடி).

கருத்து: கற்புள்ள மனையாளைப் பெறுவதைவிட வேறு பேறு இல்லை.

கற்பு என்பது, பொருள் ஊட்டமுள்ள ஒரு தமிழ்ச் சொல். அது கல் என்ற முதனிலையும், பு என்ற பண்புப் பெயர் இறுதி நிலையும் உடையது. கல்லின் தன்மை என்பது அதன் நேர் பொருள். கல்லின் தன்மையாவது:

உலகம் வியக்குமாறு போரில் திறங்காட்டி இறந்த மறவன் பெயர் பொறித்தும், உலகினர்க்கு நன்னெறி காட்டிச் சென்ற தமிழ்ச் சான்றோர் பெயர் பொறித்தும், தன் வாழ்க்கைத் துணைவனோடு ஒன்றிய உள்ளமானது அசையாத்தன்மை பெற்று அரிது செய்த மகளிர் பெயர் பொறித்தும் கல் நடுவார்கள் அன்றோ! அக்கல் அருஞ்செயல்கட்கு அடிப்படையான பெரும் பண்புகளை நினைவுபடுத்தும் அன்றோ? கல்லின் தன்மை இதனால் அறியப்படும். எனவே தக்காரின் பெரும் பண்பே கற்பு என அறிதல் வேண்டும்.

கற்பு, கற்றல் என்ற பொருளுடையது என்றும், ஒரு பெண் இளமையில் பெற்றோரிடம் கற்பதாலும் மாமன் மாமியரிடம் கற்பதாலும், அப்பெயர் வந்ததென்றும் சொல்வாரும் உளர். இது சிறப்புடையப் பொருள் அன்று. ஏன்? எக்காலத்தும் பிறரிட மிருந்தே கற்கும் ஒருத்தியைத் தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற சொற்காத்தல் முதலிய அறிவு ஆற்றலு டையவளென்று கொள்ளுவதற் கில்லை ஆதலின்.

பெண்ணின் - இன் ஐந்தனுருபு: நீங்கற் பொருட்டு. தக்க - பலவின்பால் குறிப்பு வினையாலணையும் பெயர்.

## 55

**தெய்வந்தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யு மழை.**

**பி.மா: தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது**
**எழுவாள் பெய் என மழை பெய்யும்.**

பொருள்: தெய்வம் தொழாஅள் - தெய்வங்களைத் தொழமாட்டாள், கொழுநன் தொழுது எழுவாள் - கணவனைத் தொழுதபடியே

துயில் விட்டெழுவாள், (அவள் அக் கொழுநனுக்கு) பெய் என பெய்யும் மழை – பெய் என்று எண்ணிய அளவில் பெய்தால் ஒத்த பயன் மழை.

கருத்து: கண்ணையும் மனத்தையும் கவர்வனவும், மிக்க பயன் விளைப் பனவும் ஆகிய தெய்வம், தன் கணவனைவிட வேறு இல்லை என்று எண்ணும் மனைவி, அக் கணவனுக்குப் பயன் மழை.

பெய்யெனப் பெய்யும் மழை என்றது, அளவறிந்து பெய்வதோர் பயன் மழையை, ஞாலம் விரும்பிய வண்ணம் பெய்யும் மழை போல் காதலன் விரும்பியபோது, அவன் பெருமளவு இன்பம் அளிப்பவள் என்று காதல் இன்பத்தை விளக்கினார். இவ்வாறு காதலின்பத்துக்கு மழையை உவமித்தார் ஆசிரியர், மற்றோரிடத்தும். அது வருமாறு:

**வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
**வீழ்வார் அளிக்கும் அளி.** - *குறள், 1112*

என்றது காண்க.

இப்பாட்டிற்கு வேறு வகையாற் பொருள் கொண்டார் பிறரெல்லாம். பிறதெய்வங்களைத் தொழாது, கணவனையே தொழுவாள், மழையை நோக்கிப் "பெய்" எனில் அம்மழை பெய்து விடும் என்றன்றோ பொருள் கொண்டார்? அது பொருந்தாது. என்னை? மழையை நோக்கிப் 'பெய்' என வேண்டுவாள் எனில், எத் தெய்வத்தையும் வணங்காதவள் எனப்பட்டவள் மழைத் தெய்வத்தை வணங்கியவளாவாளன்றோ! இது கிடக்க, பன்னாட்கள் விண்ணின்று பொய்ப்பதும் உண்டு. அந்நாட்களிலெல்லாம் கற்புடைப் பெண்டிர் இல்லாதொழிந்தார் என்பதா?

உலகப் பெண்கள் அனைவரும் கற்பில்லாதவர் எனக் கொள்ளும் மனுவின் கொள்கையுடையார் அவ்வாறு கருதுவது பொருத்தமே யாகும். கற்புடை மகளிராலேயே இவ்வுலகு நிலை பெறுகின்றது எனக் காணும் தமிழர் அவ்வாறு கருதார். ஆதலால், வள்ளுவர் உள்ளம் அது வன்று. மழை இயற்கையின் கொடை, அது மக்கட்குக் கட்டுப்பட்டதன்று.

**உறற்பால நீக்கல் உறுவார்க்கும் ஆகா**
**பெறற்பா லனையவும் அன்னவாம் மாரி**
**வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்**
**சிறப்பின் தணிப்பாரும் இல்.** - *நாலடி 104*

CENTER FOR BHARATHIDASAN ST. 005332 LIBRARY BHARATHIDASAN UNIVERSITY

என்றதால், வாரா மழையை வருவிப்பார் என்றும், எங்கும் இல்லையென்பதையும் உணர்க. அஃதேயும் அன்றி வந்து அளவின் மிக்குப் பொழிந்து கெடுக்கும் மழையைத் தடுப்பாரும் இல்லை என்பதை அறிந்து வைக்க.

**தொழாஅள் - உயிரளபெடை**
**கற்புடைய பெண் அமிர்து ...**

*- சிறுபஞ்ச மூலம்*

என்ற அடியோடு இச்செய்யுள் ஒப்புநோக்கத்தக்கது. கற்புடைய பெண்ணானவள் தன் கணவனுக்கு அமிழ்து என்பது அவ்வடியின் பொருள்.

***- குயில், கிழமை இதழ், 27.12.1960***

## 56

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்.**

பி.: **தன்காத்து தன்கொண்டான் பேணி தகைசான்ற**
**சொல் காத்து சோர்வு இலாள் பெண்.**

பொருள்: தற்காத்து - கற்பினின்று அசையாமல் தன்னைக் காத்தும், தன் கொண்டான் பேணி - தன்னைக் கொண்டவனாகிய கணவனைக் காத்தும், தகை சான்ற சொல் காத்து - பெருமை மிக்க தன் குடிக்குரிய புகழைக் காத்தும், சோர்வு இலாஅள் பெண் - ஆகிய இவற்றில் சிறிதும் மனத்தளர்ச்சி யில்லாதவள் எவளோ, அவளே, மனைவி.

சேர சோழ பாண்டியர் வழி வந்தவள் என்ற புகழ்ச் சொல்லுக்கு இழுக்காகும்படி ஒழுக்கந் தவறமாட்டாள் என்பார், தகை சான்ற சொல் காத்து என்றார். மனவுறுதியுடையவள் என்பார் சோர்விலாள் என்றார். பெண்– மனைவி.

கருத்து: தன்னையும், துணைவனையும், குடிப் பெருமையையும் காப்பதில் மனத்தளர்ச்சியில்லாதவள் பெண்.

பண்பு, குடிப்பிறப்பு நிலைமை முதலியவற்றில் தனக்கொப்புடையானைக் கண்டு காதலால் மனம் ஒன்றுபடு மட்டும் தன் கற்பைத் தான் காத்துக் கொள்பவள் பெண். அஃதேயுமன்றி கொண்ட தலைவனைப்

**பிரிந்த வழியும் கற்பில் தன்னைக் காத்துக் கொள்பவள் பெண் என்பார் தற்காத்து என்றார்.**

**தன்னைக் கொண்டவன், அதாவது தன் உள்ளத்தைப் பறித்தவன் இருளிலும், இடுக்கணிலும் வருவதைத் தவிர்க்க என்று கூறித் தலைவனைத் தடுத்துக் காத்தலால் தற்கொண்டான் பேணி என்றார்.**

**- *குயில், கிழமை இதழ்,* 27.12.1960**

## 57

**சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்**
**நிறைகாக்குங் காப்பே தலை.**

**பி.மா : மகளிர் நிறை காக்கும் காப்பே தலை**
**சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்?**

பொருள்: மகளிர் - தமிழ் மகளிர், நிறை - தம் நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்துவதோர் நிறையை, காக்கும் காப்பே தலை - காப்பதோர் காவலே உலகில் சிறந்தது. சிறை காக்கும் காப்பு - பிற வந்தேறிகள் தம் மனைவியரைச் சிறை வைத்தலால் காக்கும் காப்பு, எவன் செய்யும் - என்ன பயனைச் செய்யும் (பயன்படாது என்றபடி).

கருத்து: மகளிர் மாட்டு வந்தேறிகள் கொண்ட மனப்பான்மை தமிழர்களால் வெறுக்கத்தக்கதாகும்.

மனு சொல்லுகிறார்: மாதர்கள், கற்பு நிலை இன்மையும், நிலையா மனமும், நட் பின்மையும் இயற்கையாக உடையவர்களாதலால், அவர்களின் கணவன்மார்களால், சிறை வைத்துக் காப்பாற்றப் பட்டிருப்பினும், கணவர்களை அம்மகளிர் பகைப்பார்கள். மகளிர்கட்கு இந்த இயற்கைப் பண்பு பிரமன் தோற்றுவித்தபோதே உண்டான தென்றறிந்து ஆடவர்கள் அவர்கள் கேடுறாமல் நடப்பதற்கான கட்டாய முயற்சி செய்யவேண்டும் - என்று.

தம்மினப் பெண்களின் இயற்கை நடைகண்டே மனு இவ்வாறு கூறினார். நிறைகாத்தல் என்றது தமிழ் மகளிரைப் பற்றியது. சிறை காத்தல் பிற வந்தேறிகளைப் பற்றியது. நிறை - என்பதில் நிறு முதனிலை; ஐ தொழிற் பெயர் இறுதி நிலை. நிறுத்தல் என்பது பொருள்.

**- *குயில், கிழமை இதழ்,* 27.12.1960**

## 58

**பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழு முலகு.**

**பி.மா.: பெண்டிர் பெற்றான் பெறின் பெருமை சிறப்பு**
**புத்தேளிர் வாழும் உலகு பெறுவர்.**

பொருள்: பெண்டிர் - மகளிர், பெற்றான் பெறின் - தன் உள்ளத்தைக் கவர்ந்த துணைவனின் உள்ளத்தைக் கவர்ந்தாராயின், பெருமை சிறப்பு புத்தேளிர் வாழும் உலகு பெறுவர் - பெருஞ் சிறப்பினை யுடைய தெய்வங்கள் வாழுவதெனச் சொல்லப்படும் உலகைப் பெறுவார்கள்.

கருத்து: தற்கொண்டான் உள்ளத்தைக் கவர்ந்த மகளிர் எல்லாப் பேறும் பெறுவார்.

புத்தேளிர் வாழும் உலகு என்றது புகழ், செல்வம், முதலிய பயன்படு பொருள்களும், கண்ணையும் மனத்தையும் கவர்கின்ற பொருள்களும் ஆகிய கூட்டத்தை, இது முன்னர் விளக்கப் பட்டது. பெற்றான் பெறின் இரண்டாம் வேற்றுமைத் தொகை. நிலைமொழி உயர்திணையானதால் பெற்றாற் பெறின் என்றாயிற்று. புத்தேளிர் உயர்திணைப் பன்மை, தெய்வங்கள் என்பது பொருள்.

பெற்றான் பெறின் என்பதற்குக் கணவனை வழிபடுதல் பெறுவராயின் எனப் பொருள் கூறினார் பரிமேலழகர். வழிபடுவதால் காதலர் இருசார்பினரும் எதிர்பார்க்கும் இன்பம் அடைதலில்லை என்பதை அவர் எண்ணினாரில்லை.

**- *குயில், கிழமை இதழ்,* 03.01.1961**

## 59

**புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்**
**னேறுபோற் பீடு நடை.**

**பி.மா.: இகழ்வார்முன் ஏறு போல் பீடு நடை**
**புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை.**

பொருள்: இகழ்வார்முன் - இகழ்வாராகிய பகைவர் எதிரில், ஏறுபோல் பீடு நடை - அரிமா ஏற்றைப் போல் நிமிர்ந்த நடை, புகழ் புரிந்த இல் இல்லோர்க்கு இல்லை - புகழை விரும்பிய மனையாள் இல்லாதார்க்கு இருக்கமுடியாது.

கருத்து: நன் மனைவியைப் பெறாதான் பகைவர் முன் நிமிர்ந்து நடக்க முடியாது.

புரிந்த என்னும் பெயரெச்சத்தின் ஈற்று அகரம் தொக்கது. இல்- மனைவி, ஆகு பெயர்.

'இல்லாள் ஒருத்தி' புகழை விரும்புவதாவது: ஆதிமந்தி, ஔவை போன்ற பெண் மக்களையும், செங்குட்டுவன் வள்ளுவன் போன்ற ஆண் மக்களையும் உலகுக்கு ஈன்று தர விரும்புவது முதலியவை: பீடுநடை - பெருமை நடை, நிமிர்ந்த நடை என்றாம்.

## 60

**மங்கல மென்ப மனைமாட்சி மற்றத**
**னன்கல நன்மக்கட் பேறு.**

**பி.மா.: மனைமாட்சி மங்கலம் என்ப மற்று அதன்**
**நன்மை கலம் நன்மை மக்கள் பேறு.**

பொருள்: மனைமாட்சி - மனையாளின் நற்பண்பு, நற் செயல்களை, மங்கலம் என்ப - குடும்பத்திற்கமைந்த இயற்கை யழகு என்பர் அறிவுடையோர். அதன் நன்மை கலம் நன்மை மக்கட் பேறு என்ப - அதற்கு மேல் அமைந்த நல்லணியாவது நல்ல மக்களைப் பெறுவது என்பர் அறிவுடையோர்.

கருத்து: மனைமாட்சி மங்கலம் என்ப. நன்மக்கட் பேறு, அதன் மேல் அமைந்த நல்லணி என்ப.

மங்கலம் - இயற்கையழகு.

**நறுமலர்க் கோதைநின் நலம்பா ராட்டுநர்**
**மறுவில் மங்கல அணியே அன்றியும்**
**பிறிதணி அணியப் பெற்றதை எவன் கொல்?**

*- சிலப்; மனையறம், 62-64*

என்பதில் மங்கல அணி, இயற்கை அழகென்று பொருள் கொள்ளப் பட்டது காண்க.

இயற்கை அழகிருக்கவும், செயற்கை யழகாய அணியும் இல்லாள் விரும்புமோ எனின், அவள் மக்களை விரும்புதல் போல் விரும்பும். இதனாலன்றோ,

**மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்**
**ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல் - நாடிமுன்**
**ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்**
**பெய்துரையா வைத்தார் பெரிது.** *- நன்.55*

எனப் பிறரும் கூறி மகளிர்க்கு அணியின் தேவையை விளக்கினார்.

**நன்மக்களாவார்:** இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்லை உண்டாக்கும் மக்கள்.

என்ப - என்பது நன்மக்கட்பேறு என்பதனோடும் கூட்டப்பட்டது.

**- *குயில், கிழமை இதழ்,* 3. 1. 1961**

## அதிகாரம் - 7

### மக்கட் பேறு

### 61

அஃதாவது, நன் மக்களைப் பெறுதல்.

**பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த**
**மக்கட் பேறல்ல பிற.**

**பிமா.:** **பெறுமவற்றுள் அறிவு அறிந்த மக்கள் பேறு**
**அல்ல பிற யாம் அறிவது இல்லை.**

பொருள்: பெறுமவற்றுள் - ஒருவன் பெறத்தக்க பேறுகள் பலவற்றில், அறிவு அறிந்த மக்கட் பேறு அல்ல பிற- பொருட் பெற்றியறிந்த நன்மக்களைப் பெறுவதல்லது வேறு பேறுகளை, யாம் அறிவது இல்லை - யாம் அறியப் போவதுமில்லை.

கருத்து: நன்மக்களைப் பெறுதலைவிட வேறு பெறத்தக்க பேற்றை யாம் அறிந்ததுமில்லை, அறிகின்றதுமில்லை, அறியப் போவதுமில்லை.

அறிவது இல்லை என எதிர்காலத்தாற் சொன்னது, மற்றக் காலத்தையும் கொள்ளுவதற்கு. உம்மை தொக்கது. அறிவு அறிதல் என்பதில் முதற்கண்ணுள்ள அறிவு, பொருள் என்ற வாறு; அது பொருளின் உயர்வுக்காதலின் ஆகுபெயர்.

முன் அதிகாரத்தில், மனைமாட்சி நன்கலம் என்று கூறினவர், இவ்வதிகாரத்தில் அதையே வலியுறுத்தத் தொடங் கினார். அடுத்த பாட்டில் அதற்குக் காரணம் கூறுவதும் காண்க.

- *குயில், கிழமை இதழ்*, **3. 1. 1961**

### 62

**எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்.**

**பி.மா.:** **பழி பிறங்கா பண்பு உடை மக்கள் பெறின்**
**எழு பிறப்பும் தீயவை தீண்டா.**

பொருள்: பழி பிறங்கா - பிறர் பழிக்கும் பழி ஏற்படாத, பண்பு உடை - நற்பண்புடைய, மக்கள் பெறின் - மக்களை ஒருவன் பெறு வானானால், எழு பிறப்பும் தீயவை தீண்டா - அவனது ஏழு தலைமுறைக் கண்ணும் துன்பங்கள் அணுகமாட்டா.

கருத்து: நன்மக்களைப் பெற்றவனது ஏழு தலைமறைக் கண்ணும் தீமைகள் அணுகமாட்டா.

ஏழு தலைமுறை என்றது, கீழேழு தலை முறையை, அவன் மகன், பேரன் முதலியவரை.

எழு பிறப்பு என்பதற்கு எழுவகைப் பிறப்பு என்று பொருள் கொண்டார் பரிமேலழகர். ஒருவன் வினைக்கீடாக மக்களாய், விலங்காய்ப், பறவையாய், ஊர்வனவாய், நீர் வாழ்வனவாய், மரம் செடி கொடிகளாய்த், தேவராய்ப் பிறப்பானாம். அவன் நன்மக்களைப் பெற்றுவிட்டு, இறந்து, பின் மக்களாகவோ, விலங்காகவோ பிறந்தால், எந்தத் தீமையும் அந்த மக்களோ, அந்த விலங்கோ, பிறவோ அடைவதில்லையாம்.

ஏன்? - இது கிடக்கட்டும்! நன்மக்களைப் பெற்ற ஒருவன் அடுத்த பிறப்பாகக் கீரைத் தண்டாகப் பிறந்தாலும், அந்தக் கீரைத் தண்டும் தீமை யடைவதில்லை எனில், கீரைத்தண்டாய்ப் பிறப்பதே தீமையடைந்தவாறு தானே! அவன் புலியாய்ப் பிறக்கின்றான் எனின், புலியாய்ப் பிறப்பதே தீமையடைந்தவாறு தானே? நன்மக்களை அடைந்ததால் பயன் என்ன?

எழுவகைப் பிறப்பு எனப் பொருள் கொண்டது பொருந்தாது என விடுக்க.

இனி எழு பிறப்பு - ஏழு தலைமுறை என்பதற்கு மேற்கோள் வருமாறு:

**கேசவன் றமர் கீழ்மேல் எமரே ழெழு பிறப்பும்**

*- திருவாய் மொழிப் பாட்டு*

என்பதற்குக் கீழே ஏழு தலைமுறையும், மேலே ஏழு தலை முறையும் எனப் பொருள் ஆவதும், அவ்வாறே பொருள் கொண்டதும் காண்க.

**பாவந் தன்னையும் பாறக்கைத்**
**தெமர் ஏழேழு பிறப்பும்** *- 2ஆம் பத்து*

என்பது போல மற்றும் பலவிடத்து வருதலும் காண்க.

ஒருவன் நன்மக்களைப் பெறுவான் எனில், அவனது ஏழு தலை முறையுடையாரும் தீமை காணார் என்பது மட்டும் பொருந்துவதோ எனில், ஆம் பொருந்துவதே. அறிவுடைய மகனுக்கு மகனும் அறிவுடையானன்றோ? அவனுக்கு மகனும் அவ்வாறே அன்றோ?

இவ்வாறு ஏழு தலைமுறையுடையாரும் அறிஞராவார் அன்றோ? - அறிவுடையார் ஆகவே, தீமைகள் அண்டா என்பது சொல்லவும் வேண்டுமோ!

எழுபிறப்பு என ஏழைக் குறித்தது என்னவெனில் ஒன்றல்லாதது ஏழ் எனக் கூறுவது வழக்கு. ஒருவனை நோக்கி மற்றொருவன் கடைக்குச் சென்று நெல்லும், கொள்ளும் வாங்கி வா என்றான். அது கேட்டோனும் நன்று என்றான். பின்னும் அவன், நெல்லும், கொள்ளும் வாங்கி வா என்றான். அதற்கு மற்றவன் ஏழு முறை கூறுவதென்ன என்று முனிந்தான். ஒன்று அல்லாதது ஏழு ஆனமை காண்க.

## 63

**தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு**
**டந்தம் வினையான் வரும்.**

**பி.மா.: அவதபொருள் தம் தம் வினையான்வரும்**
**தம் மக்கள் தம்பொருள் என்ப.**

**பொருள்:** அவர் - அம் மக்களுக்கு, பொருள் - செல்வமானது, தம் தம் வினையான் வரும் - தத்தமது செயலின் தகுதிக் கேற்பச் சேரும் ஆதலின், தம் மக்கள் தம் பொருள் என்ப - பெற்றோர் தம் மக்களே அப்பெற்றோரின் முதுமைக்கு வேண்டிய செல்வம் என்று அறிவுடையோர் கூறுவார்.

**கருத்து:** பெற்றோரின் முதுமைக்கு அவர்தம் மக்களே செல்வம்.

பெற்றோர் மனந்தூயராய் நற்செயல் செய்து வாழ்க்கைத் துணை பெற்று, நன் மக்களைப் பெற்றாராக அவர் முதுமை பெற்ற ஞான்று, அம் மக்களும் மனந் தூயராய் நற்செயல் செய்து தம் பெற்றோரின் முதுமைக்கு நற்றுணையாவார் என்பார். இவ்வாறு கூறினார் ஆசிரியர் என்க.

தம் மக்கள் என முற்கூறிய அதனால் அவர் என்றது அம் மக்கள் என்றால். பொருளைச் சேர்ப்பாரைப் பொருள் என்றே கூறினார். இஃதோர் ஆகுபெயர்.

தம்தம் வினையான்வரும் என்றது எதற்கு எனில், தந்தை தேடிய செல்வத்தால் வாழ்நாளைக் கடத்த நினையார் நன்மக்கள்; தாமே முயன்று தேடுவார் என்றதைக் குறிக்க என்க.

## 64

**அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்**
**சிறுகை யளாவிய கூழ்.**

**பி.மா.: தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்**
**அமிழ்தினும் ஆற்ற இனிது.**

பொருள்: தம் மக்கள் - பெற்றோர்தம் குழந்தைகள், சிறுகை - தம் சிறிய கைகளால், அளாவிய கூழ் - துழவப் பெற்ற சோறானது, அமிழ் தினும் ஆற்ற இனிது - அமிழ்தைவிட மிக இனிமையுடையது பெற்றோருக்கு.

கருத்து: குழந்தை கையிட்டு அளாவிய சோறும், பெற்றோர்க்கு அமிழ்தைவிட இனிமை செய்யும்.

சிறிய அளவினதான கை என்றும், அழகிய கை என்றும் எண்ணுமாறு சிறுகை என்றார். அமிழ்து - மேனின்று அமிழும் உணவு என மழையின் காரணப் பெயர், இனிமை தரும் பொருளுக்கு வழங்குவதாயிற்று. குழைதலின், கூழ் காரணப் பெயர்.

சிறுகையாற் கூழை அளாவிய இக் குழந்தையோடு,

**படைப்புப் பலபடைத்துப் பல்லாரோ டுண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக் குறை இல்லைத்தாம் வாழும் நாளே.**

*- புறம். 188*

எனப் பாண்டியன் அறிவுடைய நம்பி காட்டும் இக் குழந்தையையும் ஒப்பு நோக்கி இன்புறுக.

**- குயில், கிழமை இதழ், 10. 1. 1961**

## 65

**மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்**
**சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.**

**பி.மா.: உடற்கு இன்பம் மக்கள் மெய்தீண்டல் செவிக்கு இன்பம் மற்று அவர் சொல் கேட்டல்.**

பொருள்: உடற்கு இன்பம் - பெற்றோரின் உடலுக்கின்பமாவது, மக்கள் மெய்தீண்டல் - குழந்தைகளின் உடம்பைத் தீண்டுவது, செவிக்கு இன்பம் - அவர்களின் காதுக்கு இன்பமாவது, அவர் சொல் கேட்டல் - அக்குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்பது.

கருத்து: குழந்தையுடல் தீண்டல், உடற்கின்பம் பயக்கும். அவர் மழலை கேட்பது, காதுக்கின்பம் பயக்கும்.

முற்பாட்டால் நாவிற்கினிமை கூறி, இப்பாட்டில் உடற்கும், காதுக்கும் ஆகும் இனிமை கூறினார். மற்று - வினைமாற்றுப் பொருளுடைய இடைச்சொல். குழந்தை நிலையில் சொல்லும் சொல்லையே ஈண்டு ஆசிரியர் குறித்தார். அதனாலன்றோ மீண்டும் 'அவர்' எனச் சுட்டினார். தீண்டல், கேட்டல் என்பன தீண்டுதலாலான இன்பத்திற்கும் கேட்டலாலான இன்பத்திற்கும் ஆனமையான் ஆகு பெயர்கள்.

செவ்வி - அழகு: செவ்வியின் தொகுத்தல் பெற்ற செவி காரணப் பெயர். இஃதறியார் இதை வடசொல் என்பார்.

## 66

**குழலினிதி யாழினி தென்பதம் மக்கண்**
**மழலைச்சொற் கேளா தவர்.**

**பி.மா.: தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் குழல் இனிது யாழ் இனிது என்ப.**

பொருள்: தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் - தம் மக்களின் மழலைச் சொல்லின் இனிமையை நுகர்ந்ததில்லாதவர், குழல் இனிது - புல்லாங்குழலின் ஓசை இனியது, யாழ் இனிது என்ப - யாழின் ஓசை இனிமையுடையது என்று கூறுவார்கள்.

கருத்து: தம் குழந்தைகளின் மழலையின்பம் நுகர்ந்தவர் குழல், யாழ்களின் இசையை இனிதென்னார்.

குழல், யாழ், மழலை என்பவை, அவற்றின் இனிமையைக் குறித்தன. குழல் என்றதால், துளைக் கருவி அனைத்தும் கொள்க. யாழ் என்றதால் நரம்புக் கருவி அனைத்தும் கொள்க. துளைக்கருவி, நரம்புக் கருவிகளில் மிகச் சிறந்தன குழலும் யாழும் ஆதலின், அவற்றை மட்டும் குறித்தார். மழலை - எழுத்தும், சொற்றிறமும் நிரம்பா மொழி.

சென்ற பாட்டில் சொல் என்றார் ஆயினும், மழலைச் சொல்லையே குறித்தது என்பதை இப்பாட்டில் வந்துள்ள மழலைச் சொல் என்பதால் அறிக.

## 67

**தந்தை மகற்காற்று நன்றி யவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்.**

**பி.மா.:** **தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**ந்தி இருப்ப செயல்.**

பொருள்: தந்தை - பெற்றோன், மகற்கு ஆற்றும் - தன் மகனுக்குச் செய்ய வேண்டிய, நன்றி - நன்மையாவது, அவையத்து - கற்றோர் குழுவில், முந்தி - மேம்பட்டு, இருப்பச் செயல் - இருக்கும்படி செய்வது.

**கருத்து:** தன் மகனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே.

வடவர் வாழ்க்கையின் தீநெறி பற்றாது தந்தை, மகனுக்குக் கல்விச் செல்வத்தைப் பண்ணுவதோடு நிற்றல் வேண்டும் என்றும், அவனுடைய மண வாழ்க்கையுரிமை முதலியவற்றில் குறுக்கிடுதல் கூடாதென்றும் விழிப்புறுத்துவார் இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

“தம் பொருள் என்ப தம் மக்கள்” என்ற முற்செய்யுள் மகன் கல்வி, கேள்விகளில் சிறந்து, செய்தக்க செய்து முதிய தன் தந்தைக்குச் செல்வமாதலைக் குறித்தது; ஆதலின் அச்செய்யுள், இச் செய்யுளை யடுத்து நிறுத்தற்குரியது. இச்செய்யுள் மகனின் கல்வி கேள்விகளிற் சிறப்புறுதல் பற்றியது ஆதலால் என்க.

முந்துதல் அவையத்தாரினும் அறிவான் மேம்படுதல்.